## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.193** **நாள் : 09.06.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள், கோடம்பாக்கம் மண்டலத்தில் மழைநீர் வடிகால் பணிகள், இலவச ஒப்பனை அறைகள் பராமரிப்பு, ஆலந்தூர் மண்டலத்தில் நடைபாதை மற்றும் பூங்கா மேம்பாட்டுப் பணிகளை இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள், கோடம்பாக்கம் மண்டலத்தில் மழைநீர் வடிகால் பணிகள், அம்மா உணவகம், இலவச ஒப்பனை அறைகளைப் பராமரித்தல், ஆலந்தூர் மண்டலத்தில் நடைபாதை மற்றும் பூங்கா மேம்பாட்டுப் பணிகளை இன்று (09.06.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-136க்குட்பட்ட பி.டி.ராஜன் சாலையில் ரூ.4.38 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். எ.பி. பத்ரோ சாலையில் உள்ள அம்மா உணவகத்தினைப் பார்வையிட்டு உணவினை தரமாகவும், சுவையாகவும் வழங்கிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். எ.பி. பத்ரோ சாலை மற்றும் அசோக் பில்லர்-காமராஜர் சாலையிலும் உள்ள இலவச ஒப்பனை அறைகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, ஒப்பனை அறைகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட கிண்டி கத்திப்பாரா முதல் மீனம்பாக்கம் விமானநிலைய சாலை வரை உள்ள நடைபாதை மற்றும் பூங்காவினைப் பார்வையிட்டு இதனை கண்கவரும் வகையில் எழில்மிகு பொலிவுடன் மரக்கன்றுகள் மற்றும் பூச்செடிகளை நட்டு பசுமைப் பரப்பினை அதிகரித்தல் மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வுகளின்போது, வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., (தெற்கு), மண்டல அலுவலர்கள் திரு.வரதராஜன், திரு.எஸ்.முருகதாஸ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**